CrMP No.2604/2025 01.04.2026

**PW 1 ராமச்சந்திரன் த/பெ.பெரியாண்டி சத்தியப்பிரமாண வாக்குமூலம்**

நான் தற்போது குன்னாரம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஒய்வு பெற்று தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 11.09.2023 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் எனது தென்னந்தோப்பிற்கு சென்று பார்த்தபோது வழக்கின் எதிரிகளான குருசிவன், நீதிராஜன், அங்கயற்கண்ணி, புயல்ராஜ் ஆகியோர்கள் எனது தென்னந்தோப்பிலிருந்த தேங்காய்களை வெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள். நான் அவர்களை மறித்தபோது எதிரிகள் அனைவரும் என்னை உருட்டு கட்டையால் அடித்தார்கள். என்னை பார்த்து குருசிவன் என்னடா " தாயோழி ' என்று அசிங்கமாக பேசினார். மேலும் குருசிவம் இவனை அடித்து கொல்லுங்கள் என்று உரக்க கத்தினார். அனைவரும் என்னை அடித்தார்கள். எனது முழங்காலிலும் காயம் ஏற்பட்டது. அவர்கள் அருவாளை என் மீது விசினார்கள், நான் நகர்ந்துகொண்டு தப்பித்துவிட்டேன். நான் மயங்கிவிட்டேன், உடனே நடராஜன் மகன் ஆசைதம்பி அங்கு வந்து என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மேலூர் அரசு மருத்துவமனையில் 03.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். மறுநாள் கொட்டாம்பட்டி போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள், நடந்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேன். 15.09.2023 ம் தேதி மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகிவிட்டேன். 16.09.2023 ம் தேதி கொட்டாம்பட்டி காவல் நிலையம் சென்று வழக்கு குறித்து விசாரித்தேன், அவர்கள் என்னிடம் 2 வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். உடனடியாக வழக்கு போடுவதாக என்னிடம் சொல்லி அனுப்பிவைத்துவிட்டார்கள். பல முறை காவல் நிலையத்திற்கு சென்று விசாரித்தேன், 25.06.2025 ம் தேதி காவல்

நிலையம் சென்று மீண்டும் கேட்டபோது வழக்கு இல்லை என்று சொல்லி என்னை அனுப்பிவைத்துவிட்டார்கள். இதைதொடர்ந்து 7 வது மாதம் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மேலூர் துணை மாவட்ட கண்காணிப்பாளருக்கு தபால் மூலம் வழக்கு பதிவு செய்ய சொல்லி தபால் அனுப்பினேன். இதுவரை வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை.